# அவர் மூன்றாம் நாள் எழுந்தார்

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாட்கள் முழுவதுமாய் (24 x 3 = 72) அதாவது 72 மணி நேரம் கல்லறையில் இருக்கவில்லை. ஆனால் மூன்று பகல் மூன்று இரவு காலத்தின் பாகங்களில் மாத்திரம் கல்லறையில் இருந்தார். நமது காலண்டர் பழக்கத்தின்படி வெள்ளிக்கிழமை பிற்பகலில் அவர் சிலுவையில் அறையப்பட்டு, ஞாயிற்றுகிழமை காலையில் அவர் உயிர்தெழுந்ததார். இந்த கருத்து சரியானது என்பதற்கு மிகத்திடமான அத்தாட்சி இருக்கிறது.

1. அடையாளமான பஸ்கா ஆட்டுக்குட்டி நிசான் மாதம் 14ம் நாள் கொல்லப்பட்டது. நிசான் மாதம் 16வது நாள் (லேவி 23:5,6,10,11,15-17)வாற்கோதுமையின் முதற்பலனாகிய கதிர்கட்டு கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டப்பட்டது. இது நித்திரை அடைந்தவர்களுக்கு முதற்பலனான கிறிஸ்துவின் உயித்தெழுதலை அடையாளப்படுத்துகிறது. (1 கொ 15:20) இந்த காரியம். இதனை தெளிவாக நிரந்தரமாக முடிவு செய்கிறது. நமது கர்த்தர் "வேத வாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார்" என்ற திரும்பத் திரும்ப வேதாகமம் கூறியிருப்பதோடு இணக்கமாயிருக்கிறது. (1 கொ 15:4, லூக் 24:46) முதற்பலன்கள் சம்பந்தமான அந்த (லேவி 23:5,6,10,11,15-17) வேதப்பகுதியே நமது கர்த்தர் உயித்தெழும் நேரத்தை முன்னறிவிக்கும் ஒரே ஒரு அடையாளம் (TYPE) என்பதை நினைவில் கொள்ளவும்.
2. மேலும் நமது கர்த்தரின் மரணத்தை பெரிய வெள்ளிக்கிழமையாகவும், அவரது உயிர்த்தெழுதலை ஈஸ்டராகவும் அனுசரிக்கும் பண்டிகை ஆசார்புகளை பாரம்பரியம் அறிவிக்கிறபடியே சரித்திரமும் சுட்டிக்காட்டுகிறது. அந்த தேதிகளை புரட்டிக்கூற ஏதாவது உளநோக்கு இருந்தாலொழிய மற்றபடி சாதாரணமாயிருக்கும் இந்த காரியத்தில் சரித்திரமே சுட்டிக்காட்டுகிறது என்ற உண்மை இதனை அதிகமாய் உறுதிப்படுத்துகிறது.
3. இந்த உண்மைக்கு மாறாக தோன்றுகிற ஒரே வேதவாக்கியம் என்னவென்றால் நமது கர்த்தர் இரவும் பகலும் மூன்று நாள் பூமியின் இருதயத்தில் இருப்பார் என்பதே (மத் 12:40) அதாவது இது அவர் மரித்த நிலையில் மூன்று முழு நாட்களும் மூன்று இரவுகளும் இருந்ததாகக்

கூறுவதைப் போல தெரிகிறது. இச்சொற்றொடர் ஒரு பொதுவானதாகும். திட்டமானதொன்றல்ல. எபிரேயர் மத்தியில் நடையமுறையில் வழங்கும் சொற்றொடராகும். (1 சாமு 30:12) இவ்விதமாக புரிந்துகொண்டோமானால் நம்முடைய கர்த்தர் மூன்று பகல் மூன்று இரவு காலங்கள் கல்லறையில் இருந்தார் என இச்சொற்றொடர் கூறாது, மூன்று பகல் மூன்று இரவு காலங்களின் பாகங்களில் கல்லறையில் இருந்ததையும் தெரிவிக்கறது என்று அறிகிறோம்.

4. மேற்கொண்ட இந்த விளக்கங்கள் எல்லாவற்றிலும் அவர் நிசான் மாதம் 14ம் தேதி மரித்தார் என்பதற்கும், மூன்றாவது நாளான 16ம் தேதி உயிரோடெழுந்தார் என்பதற்குமுரிய சான்று, எதிர்ப்பு எல்லாவற்றையும் மேற்கொள்ளுகிறதாயிருக்கிறது.